—

# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

# கொழும்பு

************

ஊடக அறிக்கை

**மே மாதத்தில் IND SAT 2020 பரீட்சைகள்**

இலங்கை மாணவர்களின் நலன்கருதி IND SAT 2020 பரீட்சைகள் 2020 மே மாதம் 16 ஆம் திகதி 1400 மணிமுதல் 1530 மணிவரை ( உள்ளூர் நேரம்) நடத்தப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. அத்துடன் இந்த பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 30 ஏப்ரல் 2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையானது இணையவழி (Online) மூலமாக நடத்தப்படவுள்ளதுடன் பரீட்சார்திகள் தமது வீடுகளிலிருந்தவாறு பரீட்சையினை எழுதமுடியும் . இந்த பரீட்சைப் புள்ளிகள் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களுக்காக கவனத்தில் கொள்ளப்படுமே தவிர ‘ Study In India’ திட்டத்தின்கீழ் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள முடியாது.

இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை www.studyinindia.gov.in என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். ஆர்வமுள்ள பரீட்சார்திகள் 30 ஏப்ரல் 2020 க்கு முன்னர் இணையவழி மூலமாக பதிவுசெய்யமுடியும்.

****************

கொழும்பு

28 ஏப்ரல் 2020